# மனைவியின் உரிமைகள்

எவ்வகையில் கணவனுடைய உரிமைகள் ஒரு மனைவியின்மீது உள்ளனவோ, அவ்வாறே, மனைவியின் உரிமைகளும் ஒரு கணவனின்மீது உள்ளன. அவற்றுள் சில பொருளாதாரம் சார்ந்த உரிமைகளாகவும் சில பொருளாதாரம் சாராத உரிமைகளாகவும் உள்ளன.

1 **மஹர்:** இது ஒரு மனைவியின் தனிப்பெரும் உரிமையாகும், இது குறைவானதாகவோ அல்லது அதிகமானதாகவோ இருப்பது அதற்கான எல்லை ஏதும் நிர்ணயிக்கப்படாவிட்டாலும், மஹர் விஷயத்தில் எல்லை மீறும் செயல்கள் விரும்பத்தக்கவையல்ல. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ أَعْظَمَ النِّكَاحِ بَرَكَةً أَيْسَرُهُ مَؤُونَةً (أحمد)

பொருள்: *அல்லாஹ்வின் அருள் நிறைந்த நிகாஹ் எதுவென்றால், எது கஷ்டங்களை எதிர்கொள்ளவேண்டிய விஷயத்தில் எளிமையாக்கப்படுகிறதோ அதுவே (அஹ்மது).*

2 **பொருளைச் செலவிடுதல்:** இதன் பொருள், ஒரு கணவன்மீது தன்னுடைய மனைவிக்காக அவளுடைய உணவு, உடை, இருப்பிடம் மற்ற அனைத்து விஷயங்களிலும் தான் பொறுப்பேற்று செலவு செய்ய வேண்டியவை என்பதாகும். இவ்விஷயத்தில், மனைவி செல்வம் படைத்தவளாக இருந்தாலும் இது அவளுடைய தனிப்பெரும் உரிமையாகும்

3 **பண்புடனான நல்லுறவு:** ஒரு கணவன் மீதான மிகப்பெரும் பொறுப்பு யாதெனில், அவன் தன்னுடைய மனைவியுடன் நல்லுறவு கொண்டிருக்கவேண்டும், அவளுக்கு உரிய மரியாதை அளிக்கவேண்டும், மற்றும் இருவருக்கிடையில் அன்பும் பாசமும் உண்டாக்கும் வகையிலான செயல்களைச் செய்துகொண்டிருக்கவேண்டும். ஒரு முஸ்லிமுடைய நல்லொழுக்கப்பண்பின் அடையாளம் யாதெனில், அவன் தன்னுடைய மனைவியுடன் கருணை காட்டும் பண்பினைக் கொண்டிருப்பதாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

أَكْمَلُ الْمُؤْمِنِينَ إِيمَانًا أَحْسَنُهُمْ خُلُقًا، وَخَيْرُكُمْ خَيْرُكُمْ لِنِسَائِهِمْ (الترمذي)

பொருள்: *இறைநம்பிக்கையாளர்களில் ஈமானில் முழுமைப்பெற்ற உயர்வானவர் யாரெனில், ஒழுக்கப்பண்புகளில் சிறந்து விளங்குபவர் தான். உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியரிடத்தில் சிறந்த முறையில் நடந்துகொள்பவர்களே (திர்மிதி)*

www.uzairfalahi.com

மனைவிக்கான மரியாதையில் அவள் செய்யும் தவறுகளையெல்லாம் பொறுத்துக்கொள்வதும் அடங்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறு கிறார்கள்:

مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ، فَإِذَا شَهِدَ أَمْرًا فَلْيَتَكَلَّمْ بِخَيْرٍ أَوْ لِيَسْكُتْ، وَاسْتَوْصُوا بِالنِّسَاءِ، فَإِنَّ الْمَرْأَةَ خُلِقَتْ مِنْ ضِلَعٍ، وَإِنَّ أَعْوَجَ شَيْءٍ فِي الضِّلَعِ أَعْلَاهُ، إِنْ ذَهَبْتَ تُقِيمُهُ كَسَرْتَهُ، وَإِنْ تَرَكْتَهُ لَمْ يَزَلْ أَعْوَجَ، اسْتَوْصُوا بِالنِّسَاءِ خَيْرًا (البخاري، مسلم)

பொருள்: *எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்றாரோ அவர் ஒரு விஷயம் நிகழ்வதைக் கண்டால் நல்லதையே கூறவேண்டும் அல்லது அமைதியாகப் பேசாமலிருக்க வேண்டும். பெண்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள், ஏனெனில், ஒரு பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள், மற்றும் விலா எலும்புகளியேலயே மிகவும் கோணலானது மேல்புற மான விலாக்களே, நீ அதனை நேராக ஆக்க முயற்சித்தால் அதனை உடைத்தே விடுவாய், அவளை விட்டுவிடுவாயேயானல் அவள் கோணலானவளாகவே இருப்பாள், நீங்கள் பெண்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள்.* (புக்ஹாரி, முஸ்லிம்).

அவ்வாறே, நல்ல முறையில் நடந்துகொள்வது என்பது கணவன் மனைவியின் மனதில் பாசம் மற்றும் மகிழ்ச்சியினை உண்டாக்கும் வகையில் நடந்துகொள்ளவேண்டும் என்பதாகும். ஏனெனில், இதன் காரணமாக, குடும்பத்தினரிடையே அன்பு மற்றும் பாசமான சுற்றுச் சூழல் உருவாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் அயிஷா (ர) அவர்களுடன் சிரித்தும் கேலி செய்தும் கொள்வார்கள் மற்றும் பந்தய மாக ஓடவும் செய்வார்கள்.

4 **மனைவியின் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் பாதகம் ஏற்படுத்தும் ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் அவளைப் பாதுகாக்கவேண்டும்:** ஒரு கணவன் தன்னுடைய மனைவியின் தன்மானத்தைப்பற்றிய விஷயத்தில் கணவன் மனைவி உறவில் குழப்பம் மற்றும் அவர்களுடைய குடும்ப வாழ்க்கையே நரகமாக ஆகிவிடாவண்ணம் மிகவும் நடுநிலையான போக்கினைக் கடைபிடிக்கவேண்டும். இதன் காரணமாக, அவர்களுக் கிடையே நம்பகத் தன்மை இல்லாது போகவோ அவர்கள் வாழ்க்கை யினைத் தொடருவதே இயலாத ஒன்றாகவோ ஆகிவிடக்கூடாது.

5 **மார்க்கக் கல்வி போதித்து பாவங்களிலிருந்து தடுத்தல்:** அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

www.uzairfalah.com

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ قُوٓاْ أَنفُسَكُمۡ وَأَهۡلِيكُمۡ نَارٗا وَقُودُهَا ٱلنَّاسُ وَٱلۡحِجَارَةُ عَلَيۡهَا مَلَٰٓئِكَةٌ غِلَاظٞ شِدَادٞ لَّا يَعۡصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمۡ وَيَفۡعَلُونَ مَا يُؤۡمَرُونَ ٦ **(التحريم:6)**

பொருள்: *இறை நம்பிக்கை கொண்டவர்களே, மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக் இருக்கக்கூடிய அந்த நரக நெருப்பிலிருந்து உங்களையும் உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்றிக்கொள்ளுங்கள், அதன்மீது கடும் சீற்றமுடைய வானவர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள், அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஒருபோதும் மாறு செய்வதில்லை (அத்தஹ்ரீம்:6)*

6 **மனைவியின் இரகசியங்களை சொல்லாதிருத்தல்:** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**إِنَّ مِنْ أَشَرِّ النَّاسِ عِنْدَ اللهِ مَنْزِلَةً يَوْمَ الْقِيَامَةِ، الرَّجُلَ يُفْضِي إِلَى امْرَأَتِهِ، وَتُفْضِي إِلَيْهِ، ثُمَّ يَنْشُرُ سِرَّهَا (مسلم)**

பொருள்: *அல்லாஹ்விடத்தில் மறுமை நாளன்று மனிதர்களில் மிகவும் கேடானவன் யாரெனில், ஒருவன் தன்னுடைய மனைவியிடமும் மனைவி அவனிடமும் சென்று தன்னுடைய தேவையினைப் பூர்த்தி செய்துகொண்டு (உடலுறவு) அதன்பின் அதனைப்பற்றிய அந்தரங்கங்களை வெளிப்படுத்துபவன் (முஸ்லிம்)*

7 **மனைவியின் மீது கொடுமையிழைக்கக்கூடாது**

8 **கணவன் தன் வீட்டைவிட்டு நீண்ட காலம் வெளியூர் சென்றிருந்தால் திடீரென இரவில் வீட்டிற்குத் திரும்பி வரக்கூடாது:** உதாரணமாக, ஒருவர் பயணம் மேற்கொண்டிருக்கும் நிலையில், முன்பாகவே தகவல் அனுப்பியிருந்தால் தவறு ஒன்றுமில்லை. கணவன் மனைவிக்கிடையே சீரான உறவுகள் நீடிப்பதற்காக இஸ்லாம் வகுத்துத் தந்துள்ள அடிப்படைகளில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு செய்வதால் மனைவியின் உணர்வுகள் மதிக்கப்படும் மற்றும் இருவருக்கிடையே பரஸ்பர நம்பகத்தன்மை உறுதிப்பெறும், அத்துடன் அன்பும் பாசமும் வலுப்பெறும், இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறுகிறார்கள்:

**إِذَا أَطَالَ أَحَدُكُمُ الغَيْبَةَ فَلاَ يَطْرُقْ أَهْلَهُ لَيْلًا (البخاري)**

பொருள்: *நீங்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்டு (ஒரு பணிக்காக)ச் சென்று நீண்ட காலம் ஆகிவிடுமேயானால், திடீரென இரவு நேரத்தில் திரும்பாதீர்கள் (புக்ஹாரி)*

www.uzairfalani.com

9 **மனைவிகளுக்கிடையே நியாயமாக நடந்துகொள்ளுதல்:** ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பார்களேயானால், அவர்களுக்கிடையே நியாயமான முறையில் நடந்துகொள்ளவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறுகிறார்கள்:

إِذَا كَانَ عِنْدَ الرَّجُلِ امْرَأَتَانِ فَلَمْ يَعْدِلْ بَيْنَهُمَا جَاءَ يَوْمَ القِيَامَةِ وَشِقُّهُ سَاقِطٌ (الترمذي)

*பொருள்: ஒருவர் இரண்டு மனைவிகளை மணந்துகொண்டு, அவர்களுக்கிடையே நியாயமான முறையில் நடந்துகொள்ளவில்லையென்றால், அவர் மறுமை நாளன்று ஒரு புறத்தில் பக்கவாதமுடையவராக எழுப்பப்படுவார்* (திர்மிதி).

### கணவன் மனைவிக்கிடையிலான பரஸ்பர உறவுகள்

1 **இல்லற வாழ்க்கை மற்றும் ஒருவரைக்கொண்டு மற்றவர் சுகங்களை அனுபவிக்கும் உரிமை:** கணவனுக்கு தன்னுடைய மனைவியின் மூலம் எவற்றையெல்லாம் அனுபவிப்பது ஹலாலானதாக உள்ளதோ, அவையனைமத்தும் மனைவிக்கும் தன்னுடைய கணவனிடமிருந்து அனுபவிப்பது ஹலாலானதாகும்.

2 **திருமண உறவுகளில் தடுக்கப்பட்டவை:** அதாவது மனைவி தன்னுடைய கணவனுடைய தந்தை, தந்தையின் தந்தை மற்றும் அவருடைய மக்கள் மற்றும் மகன், மகள் அகியவர்களுடைய மக்களுடன் திருமணம் செய்துகொள்வது ஹராமானதாகும். இவ்வாறே, கணவன் தன்னுடைய மனைவியின் தாய் மற்றும் அவளுடைய மகள்களைத் திருமணம் செய்துகொள்வது ஹராமானதாகும். அவ்வாறே, மனைவியின் சித்தி மற்றும் சிற்றன்னை ஆகியோரும் ஹராமானவர்கள்.

3 **நிகாஹ் நிகழ்ந்துவிட்டடால் வாரிசு உரிமையும் ஏற்பட்டுவிடும்:** கணவன் மனைவி ஆகியோரில் எவரும் திருமணம் நிகழ்ந்துவிட்டபின் மரணித்துவிட்டால், மற்றவர் (கணவனோ மனைவியோ) வாரிசுகளாக ஆகிவிடுவார்கள், (கணவர் திருமணத்திற்குப்பின் உடலுறவுகொண்டிராவிட்டாலும்கூட).

4 **ஒரு குழந்தையினுடைய மரபுவழி படுக்கை உறவு கொண்டவரின் மூலமே ஏற்படும்**

* * *

www.uzairfalahi.com